STC.No. 411/2025
நாள் 17.11.2025.
P.W.1 – (ரவீச்சந்திரன் )
எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் இல்லை என்றால் சரி. நானும் எதிரியும் உறவினர்கள் என்றால் இல்லை. நானும் எதிரியும் ஒன்றாக வியாபாரம் செய்யவில்லை என்றால் சரி. எதிரியை எனக்கு ஜெகதீசன் என்பவர் மூலம் தெரியும். எதிரியை எனக்கு எந்த வகையில் தெரியும் என்றால் எதிரி ரியல் எஸ்டெட் செய்வதாக சொன்னார் நானும் ரியல் எஸ்டேட் செய்வேன் அந்த வகையில் தெரியும். எதிரி எந்த காலத்திலும் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஜெகதீசன் என்பவர் என்னுடன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்தார். ஜெகதீசன் என்பவருக்கு 65 வயது இருக்கும். ஜெகதீசனுக்கு 80 வயதுஎன்றாலும் நான் வழக்கிற்காக 65 வயது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன், மேலும் நான் ஆண்டாள் கோவில் அருகே துணிக் கடை வைத்துள்ளேன். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்றால் எதிரி ரியல் எஸ்டேட் செய்வதாக என்னிடம் சொன்னார்.

எதிரி ரியல் எஸ்டேட் செய்ததாக சொல்வது அவர் எந்த இடத்தை வாங்கினார் எந்த மனைகளை விற்பனை செய்தார் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. எதிரியின் அலைபேசி எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அலைபேசியை பார்த்து சொல்லலாம். சாட்சி அவர் அலைபேசியை பார்த்து எதிரியின் அலைபேசி எண். 8838903525 என தெரிவித்தார். எதிரிக்கு எத்தணை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி என்ன வேலை பார்க்கிறார் என்றால் காவல் துறையில் வேலை பார்க்கிறார். எதிரியின் வீடு புதுப்பட்டியில் கிறிஷ்டியன் பேட்டையில் உள்ளது. எதிரியின் வீட்டிற்கு நான் சென்றது இல்லை. நான் புகார் மனுவில் 15.04.2023 அன்று எதிரி பணம் கேட்ட அன்றே அவருக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். நான் கொடுத்ததாக சொல்லும் கடனிற்கு வேறு எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் ஆம். நான் கொடுத்தாக சொல்லும் கடனிற்கு வட்டி எதும் சொல்லவில்லை என்றால் சரி. என் அறிவிப்பிலோ புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரி.

ரூ.8 லட்சம் பணத்தை வட்டித் தொகை ஏதும் பேசாமல் எந்த ஆவணமும் எழுதி பெறாமல் நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் பணத்தை எதிரி எவ்வளவு நாட்களுக்குள் திருப்பி செலுத்துவார் என நான் என் புகார் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. நான் கொடுத்தாக சொல்லும் கடனை எதிரியிடம் திரும்ப கேட்டதாக என் சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. ஜெகதீசன் விவசாயம் செய்கிறார். ஜெகதீசன் 4 ஆண்டுகளாக வீட்டை விட்டு வெளியே நடந்து வர முடியாத நிலையில் இருப்பது எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் சரியல்ல. ஜெகதீசன் என் கடைக்கு வருவார். ஜெகதீசன் அவ்வாறு வெளியே வரமுடியாத நிலையில் இருப்பதால் அவரை

என் தரப்பு சாட்சியாக நான் இந் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அவருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எதிரியை எனக்கு யார் என்று தெரியாது என்றாலும் நான் இதற்கு முன் எதிரியை பார்த்தது இல்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் எதிரி ஆஜரான பின் தான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் என் துணிக் கடைக்கு வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. என் ரியல் எஸ்டேட் தொழில் குறித்து வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. நான் 15.04.2023 அன்று எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வது வங்கி கணக்கில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை, என் கைவசம் பணம் வைத்திருப்பேன்.

நான் எதிரிக்கு பெரிய தொகையை ஆவணம் ஏதும் வாங்காமல் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் புகாரில் காசோலை திருப்பப்பட்ட விபரத்தை தெரிவித்து பணத்தை கேட்டதாக மட்டும் புகாரில் சொல்லியுள்ளேன் என்றாலும் திருப்பப்பட்ட காசோலை பணத்தை கேட்டு சட்ட அறிவிப்பு அனுப்பியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் காலதாமதத்தை மன்னிக்க தாக்கல் செய்த மனுவையும் அவ்வாறு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரி. எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றாலும் எனக்கு எதிரியை யார் என்று தெரியாது என்றாலும் ஜெகதீசனுக்கு கொடுத்த காசோலையை கொண்டு நான் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த தொகையும் சட்டப்படியாக கொடுக்கப்பட வேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.